## சாதாரணக் கூட்டம் அறிவிப்பு

கூட்ட எண் – 01/ 2022 ஆரணி நகராட்சி,
நாள்:04.04.2022

நிகழும் பிலவ ஆண்டு, பங்குனி – 24, திருவள்ளுவர் ஆண்டு 2052 நாள்.07.04.2022 வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு ஆரணி நகராட்சி அலுவலகம் பேரறிஞர் அண்ணா மன்றத்தில் நடைபெறவுள்ள சாதாரணக் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**நகர மன்ற தலைவர்,**
ஆரணி நகராட்சி.

**திருக்குறள்**

**இறைகாக்கும் வையகம் எல்லாம் அவனை**
**முறைகாக்கும் முட்டாச் செயின்**

அதிகாரம் 55(547)

**நகரமன்ற தலைவர் அவர்களால் கொண்டு வரப்படும் மன்ற கூட்டப்பொருள்**

**1.** தமிழகத்தில் நடைபெற்ற 16வது சட்டமன்ற பொதுத்தேர்தலில் மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் திரு.முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களை, தமிழ்நாட்டின் முதலமைச்சராக அமர்த்திய வாக்காள பெருமக்களுக்கு இந்நகர மன்றம் உள்ளங்கனிந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறது.

தமிழகத்தில் உள்ளாட்சி தேர்தலை சிறப்பாக நடத்தி உள்ளாட்சி மன்றங்கள் சிறப்பாக செயல்படுவதற்கு வழி வகை செய்து ஆரணி நகராட்சியில் ஆறு ஆண்டுகளுக்கு பிறகு மக்கள் மன்றம் செயல்பட வழி நடத்திய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு பொதுப்பணித்துறை மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர், அவர்களுக்கும் மற்றும் மாண்புமிகு நகர்ப்புற உள்ளாட்சி துறை அமைச்சர் அவர்களுக்கும், இம்மன்றத்தின் சார்பாக நன்றி தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

மேலும் ஆரணி நகரின் வளர்ச்சிக்காக கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டத்தில் வளர்ச்சி பணிகள் மேற்கொள்ள ரூ.86.12 இலட்சம் ஒதுக்கீடு செய்து உத்திரவிட்ட மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் திரு.முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களுக்கு இந்நகர மன்றம் உள்ளங்கனிந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறது.

**நாட்குறிப்புகள்:**

**2.** அ) நகராட்சி ஆணையாளர் அவர்களின் மார்ச்–2022 மாதக்குறிப்பு

ஆ) நகராட்சி பொறியாளர் அவர்களின் மார்ச்–2022 மாதக்குறிப்பு

அலுவலகக்குறிப்பு: மன்றம் பதிவு செய்யலாம்.

**3.** நகரமன்ற கூடத்தில் முன்னாள் தமிழக முதல்வர் மதிப்பிற்குரிய டாக்டர் கலைஞர் மு.கருணாநிதி அவர்களின் திரு உருவப்படத்தையும், தற்போது முதல்வராக இருக்கின்ற மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் திரு.முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் உருவப்படத்தையும் அரசு விதிகளுக்கு உட்பட்டு நகரமன்ற கூடத்தில் நகரமன்ற தலைவர் அவர்கள் திறந்து வைப்பதென நகரமன்ற தலைவர் அவர்களால் தனி தீர்மானம் கொண்டுவரப்படுகிறது.

**4.** ஆரணி நகராட்சி அலுவலக கட்டிடத்தில் "தமிழ் வாழ்க" மற்றும் "ஆரணி நகராட்சி அலுவலகம்" ஆகிய இரண்டு பெயர் பலகை புதியதாக பொருத்த தோராய செலவினம் ரூ. 1.00/– இலட்சம் (ரூபாய் ஒரு இலட்சம் மட்டும்) வழங்க மன்றம் அனுமதி கோரப்படுகிறது.
**அலுவலக குறிப்பு:**– மன்றம் அனுமதிக்கலாம்.
(கோப்பு எண்.434/இ1/2022)

**5.** அரசாணை (நிலை) எண்.92 நாள் 02.07.2007 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை இதனை அடிப்படையாக கொண்டு வாடகை நிர்ணயம் செய்யாமல் கடந்த ஆட்சியில் பல மடங்கு வாடகையை உயர்த்தியுள்ளனர். இதனால் நகராட்சி கடைகளுக்கு, அருகே உள்ள தனியார் கடைகளை விட பல மடங்கு உயர்த்தியுள்ளனர். அதே போல் தரை தளத்தில் உள்ள கடைகளின் வாடகை அளவிற்கே மாடியில் உள்ள கடைகளையும், அதிக வியாபாரம் நடைபெறும் முன்பக்க கடைகளின் வாடகை அளவிற்கே பின்புறம், ஒதுக்குபுறமாக உள்ள கடைகளின் வாடகை உயர்த்தப்பட்டுள்ளது.
இதனால் மாடியில் உள்ள கடைகள், ஒதுக்குபுறமாக உள்ள கடைகள் காலியாக உள்ளன. இதனால் நகராட்சியின் வருமானம் குறைந்ததோடு அல்லாமல் பராமரிப்பு இல்லாமல் கடைகளும் பாழ்படுகிறது . இதனை தவிர்க்க மாண்புமிகு தமிழக முதல்வர் தலைமையிலான அரசு அரசாணையில் கூறியுள்ள படி அங்காடி மதிப்பு அடிப்படையில் நகராட்சி கடைகளை ஒட்டியுள்ள தனியார் கடைகளின் வாடகை அளவிற்கே நகராட்சி கடைகளின் வாடகை நிர்ணயம் செய்து நகராட்சியின் வருமானம் உயரவும் வியாபாரிகளின்

வாழ்வாதாரம் பாதிக்கப்படாமல் இருக்கவும் முறைப்படுத்தி பரிசீலனை செய்யுமாறு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும் , மாண்புமிகு நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் அவர்களுக்கும் நகராட்சி நிர்வாகத்துறை செயலர் அவர்களுக்கும் நகராட்சிகளின் நிர்வாக இயக்குநர் அவர்களுக்கும் மன்றத்தின் கோரிக்கையை அனுப்பி வைக்கலாம்.

அலுவலக குறிப்பு:- நகராட்சி இயக்குநர் சென்னை அவர்களின் வழியாக தமிழக அரசுக்கு முன்மொழிவுகள் அனுப்பி வைக்கலாம்.

**6.** ஆரணி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் **1** முதல் **33** வரை உள்ள வார்டுகளில் பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் தடையின்றி வழங்கிட ஏதுவாக குடிநீர் விநியோக பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள தோராய செலவினம் ரூ.**9.50** இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**-1.மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

2.மேற்காணும் பணியினை குடிநீர் நிதியின் கீழ் மேற்கொள்ளலாம்.

(கோப்பு எண்.400/இ1/2022)

**7.** ஆரணி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் தெருவிளக்கு பராமரிப்பு பணிகளுக்கு தேவையான மின் விளக்குகள் மின் உகரணங்கள் கையிருப்பு மிகவும் குறைவாக உள்ளதாலும், எரியாத தெருவிளக்குகளை உடனுக்குடன் மாற்ற வேண்டியுள்ளதாலும் உடன் ஒப்பந்தப்புள்ளி கோரி தெருவிளக்கு மின் உபகரணங்கள் வாங்க தோராய செலவினம் ரூ.9.50 இலட்சத்திற்கு மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**- 1.மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

2.மேற்காணும் பணியினை வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ளலாம்.

(கோப்பு எண்.300/இ1/2022)

**8.** ஆரணி நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் இயங்கும் வாகனம் TN – 25V–4633, TN – 25V–4635, TN–25BY 7803 ஆகியவற்றிற்கு 2022 – 2023ம் ஆண்டிற்கு சாலைவரி, பசுமை வரி, சேவை வரி ஆகியவை ரூ.21,600/–செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-** மன்றம் அனுமதிக்கலாம். அவசரம் அவசியம் கருதி நகரமன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகை செலுத்தியதை மன்றம் ஏற்கலாம்.

(கோப்பு எண்: 634/2016/எச்–1)

**9.** ஆரணி நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் இயங்கும் ACE ஆட்டோவிற்கு 25/03/2022ந் தேதியோடு இன்சூரன்ஸ் முடிவடைகிறது. அவை மேலும் ஒரு ஆண்டிற்கு புதுப்பிக்க யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட் நிறுவனத்திற்கு கீழ்க்கண்டவாறு தொகை செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

1. TN-97 1833 - ரூ. 19890
2. TN-97 1839 - ரூ. 19890
3. TN-97 1856 - ரூ. 19890

**மொத்தம் - ரூ. 59670**

**அலுவலக குறிப்பு:-** மன்றம் அனுமதிக்கலாம். அவசர அவசியம் கருதி நகர மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகை செலுத்தியதை மன்றம் ஏற்கலாம்.
(கோப்பு எண். 634/2016/எச்1)

**10.** ஆரணி நகராட்சியில் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் 100 சதவீதம் திறந்தவெளியில் மலம் கழித்தல் இல்லாத நகராட்சியாக பிரகனப்படுத்தப்பட்டுள்ளது. அதற்கு பொது மக்களிடம் கருத்து மற்றும் ஆட்சேபனைகள் கேட்கவும். மேலும் இந்நகராட்சியில் குப்பையில்லா நகராட்சியாக மாற்றி மத்திய அரசால் (MOUD) வழங்கப்படும் 3 நட்சத்திரம் அங்கீகாரம் ( 3 STAR RATING) பெற சுய உறுதிமொழி பெற மக்களிடம் ஆட்சேபனைகள் மற்றும் கருத்துக்கள் பெற 02/03/2022 அன்று தினத்தந்தி நாளிதழில் விளம்பரம் செய்தமைக்கு விளம்பர கட்டணம் ரூ.15624/-ஐ வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-** 1.மன்றம் அனுமதிக்கலாம்.
2.மேற்காணும் பணியினை வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ளலாம்.
(கோப்பு எண். 3419/2018/எச்-1)

நகரமன்ற தலைவர்,
ஆரணி நகராட்சி.

நகராட்சி அலுவலகம்,
ஆரணி.
நாள்:04.04.2022